2011 ஆகஸ்ட் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. வீரமணி அவர்கள்.*

திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய பாதம் பணிந்த பணிவான வணக்கங்களை அன்போடு தெரிவித்து, வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளியைத் தனித் தாலுகாவாக அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் உண்டா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, ஒரு வட்டம் அமைக்க வேண்டுமென்று சொன்னால் குறைந்தபட்சம் 250 சதுர கிலோ மீட்டரிலிருந்து 500 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு மற்றும் ஒரு இலட்சம் மக்கள் தொகையிலேயிருந்து 5½ இலட்சம் மக்கள் தொகை, 30 வருவாய்க் கிராமங்கள் ஆகியவை இருக்கவேண்டும். இவையெல்லாம் இருப்பின், நிதி நிலைமைக்கேற்ப மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு முடிவு செய்யப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 72, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

72—

பேருந்து வசதி

***1757—திரு. வே. குணசீலன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, வந்தவாசியிலிருந்து வழூர் வழியாக சென்னைக்கு புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வந்தவாசி கிளை 1–லிருந்து தற்போது புறநகரத் தடம் எண் 140–D மூலம் வந்தவாசியிலிருந்து சென்னைக்கு வழூர் வழியாக தினசரி 2 நடைகளும், நகரத் தடம் மூலம் வந்தவாசியிலிருந்து உத்திரமேரூருக்கு வழூர் வழியாக தினசரி 4 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் வழூரிலிருந்து உத்திரமேரூர் சென்றடைந்தால் சென்னைக்குச் செல்ல 10 நிமிட இடைவெளியில் பேருந்து வசதி உள்ளதால், பயணிகளின் அடர்வு கூடுதல் ஆகும்போது மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன் அவர்கள்.

திரு. வே. குணசீலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், கழகத்தினுடைய பொதுச் செயலாளர், மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள அம்மா அவர்களுக்கு என்னுடைய வந்தவாசி தொகுதி மக்களின் சார்பிலும், என் சார்பிலும் அவர்களின் பொற்பாதங்களுக்கு நன்றியைத் தெரிவித்து, இந்தப் பேருந்து வழித் தடம் அமைத்துத் தருவதற்கு அம்மா அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா, புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகளைக் கூறி, நாங்குநேரி தொகுதி, ஏர்வாடியிலிருந்து நாங்குநேரி, களக்காடு வழியாக சென்னைக்கு அரசு விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

2011 ஆகஸ்ட் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏர்வாடியிலிருந்து சென்னைக்கு பேருந்து வசதி வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இந்த வழித்தடம் குறித்து ஆய்வு செய்யப்பட்டு, பயணிகளுடைய அடர்வு இருக்கும்பட்சத்தில் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 73, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

73—

நியாய விலைக் கடை

***67—திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி தொகுதியில் நியாய விலைக் கடைகள் இல்லாத கிராமங்களில் புதியதாக பகுதிநேர நியாய விலைக் கடைகள் திறக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. புத்திசந்திரன், உணவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பொள்ளாச்சி வட்டத்தில், பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் 56 வருவாய்க் கிராமங்கள் உள்ளன. இந்த 56 வருவாய்க் கிராமங்களிலும் நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டு இயங்கி வருகின்றன. இவை தவிர, மேற்படி வருவாய்க் கிராமங்களின் அருகிலுள்ள 21 குக்கிராமங்களிலும் பகுதி நேரக் கடைகள் இயங்கி வருகின்றன. பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதியில் மொத்தம் 103 கடைகள் முழு நேரக் கடைகளாகவும், 33 கடைகள் பகுதி நேரக் கடைகளாகவும் இயங்கி வருகின்றன. பொதுமக்கள் பகுதி நேரக் கடைகள் கோரி விண்ணப்பிக்கும்பட்சத்தில், அரசு விதிகளின் அடிப்படையில் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு,